அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 304/2019 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.P.காயத்திரி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா.1 10.09.2025

பெயர் சுந்தரி தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>குறுக்கு விசாரணை</u>:-

1. எனக்கு ஆங்கிலம் எழுதபடிக்க தெரியுமா என்றால் ஓர்அளவுக்கு தெரியும். நிருபணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் படித்துபார்த்துதான் கையொப்பம் செய்தேன். வழக்கு சொத்து எனது மாமியார் வாங்கிய சொத்து என்றால் சரிதான். எந்த வருடத்தில் கிரையம் பெற்றார்கள் என்றால் தேதி வருடம் தெரியாது. தற்போது வழக்கு சொத்து எனது மாமியார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். இன்றைய தேதியில் வழக்கு சொத்து மதிப்பு சுமார் 5 கோடி இருக்குமா என்றால் இல்லை சுமார் 30 லட்சம் இருக்கும். எனது மாமியாருக்கு தற்போது 85 வயதாகிறது. எனது மாமியருக்கு என்ன உடல்குறைவு உள்ளது என்று எனக்கு தெரியாது. பீபி , சுகர் உள்ளதா என்றால் தெரியாது.

2. எனது மாமனார் மற்றும் மாமியாருக்கு 2ம‌கன்கள் மற்றும் 1மகள் உள்ளார்கள் தற்போது எனது மாமனார் உயிருடன் இல்லை. குடும்பத்தில் பெரியவர் இறந்துவிட்டார் மூத்த ஆண்மகன் தான் குடும்பத்தை பார்த்துக்கொள்வார் என்றால் சரிதான். தற்போது எங்கள் மாமியாரை எனது மச்சினன் 2ம் பிரதிவாதி சிவகுமார் பார்த்துக்கொள்கிறார். 2ம் பிரதிவாதி பார்த்துக்கொள்வது போல் எனது கணவர் மூத்தமகன் என்ற முறையில் பார்த்துக்கொள்ளவேண்டும் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் இரட்டைபிறவிகள்.

3. 2ம் பிரதிவாதி தற்போது கிளினிக்கில் வேலை செய்துவருகிறார். பெயர் தெரியாது. 2ம் பிரதிவாதி பிள்ளையார் கோவிலில் குருகளாக உள்ளார் என்றால் அவரது டியுட்டி முடிந்தபிறகு மாலைநேரத்தில் கோவிலுக்கு சென்று உதவுவார். தற்போது வழக்கு சொத்தில் யார் வாழந்து வருகிறார்கள் என்றால் ராஜகணபதி மற்றும் நான் மற்றும் என் மகள் சரண்யா வாழந்துவருகிறோம். எனக்கு 08.02.2002 வருடத்தில் திருமணம் ஆனது. 2ம் பிரதிவாதிக்கு 1999 வருடத்தில் திருமணம் ஆனது. திருமணம் ஆன காலத்தில் இருந்து 2ம் பிரதிவாதி அவரது மனைவியுடன் சொத்தில் வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் வாடகை வீட்டில் இருக்கிறார்.

4. எனக்கு திருமணம் ஆனகாலத்தில் இருந்து வழக்கு சொத்தில் தான் வாழ்ந்து வருகிறேன். 2ம் பிரதிவாதி 2004 வருடத்தில் தான் வீடுகட்டினார். எனது பிராதில் நாங்கள் வழக்கு சொத்தில் குடிவந்த பிறகு பிரதிவாதி வேறுவீடு கட்டி சென்று விட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றாலும் அதற்கு முன்பு நான் வேறு எங்கு குடியிருந்தேன் என்றால் திருமணம் ஆனதில் இருந்து வழக்கு சொத்தில் தான் குடியிருந்து வருகிறேன். எனது நிருபணவாக்குமூலத்தில் நானும் எனது கணவரும் வீட்டிற்கு அருகில்

வேறு வீட்டில் குடியேறியதாக சொல்லியுள்ளேன் என்றால் எனது மகள் பள்ளிக்கு அருகில் குடியேறினோம். பள்ளியின் பெயர் வில்லிவாக்கம் பஞ்சாயத்து ஆரம்பநிலை பள்ளியாகும். நான் அதே பள்ளியில் வேலை செய்கிறேன் என்றால் சரிதான். மீண்டும் ஜனவரி 2004 வருடத்தில் வழக்கு சொத்தில் வந்துவிட்டோம்.

5. வழக்கு சொத்து விஸ்திரணம் 1225 சதுரஅடியாகும். வழக்கு சொத்தில் இடம் பத்தாமல் நாங்கள் வெளியேறினோமா என்றால் இல்லை. வீட்டின் அளவு 450 சதுரஅடி ஆகும். எனது மாமியார் சொன்னதால் சென்றோம். நான் வெளியே குடியிருந்த 6 மாத காலத்தில் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் தான் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். 2003 செப்படம்பர் மாததில் இருந்து 2004 ஜனவரி வரை வெளியேறினோம். பிறகு மீண்டும் வழக்கு சொத்திற்கு வந்தோம். மேற்கூறிய 6 மாதங்கள் 1ம் பிரதிவாதிதான் வழக்கு சொத்தை பராமரித்து வந்தார் என்றால் சரிதான். எனது நிருபணவாக்குமூலத்தில் தற்போது என் மகள் 12ம் வகுப்பு படிப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் 12ம் வகுப்பு படித்து வந்ததாக சொல்ல முன்வந்தேன். நிருபணவாக்குமூலத்தில் தவறாக குறிப்பிட்டுள்ளதா என்றால் பிழை உள்ளது.

6. நான் செலவு செய்து கூடுதலாக என்ன வீட்டில் செய்தேன் என்றால் வீட்டின் முன்பு குழி இருந்தது அதை சிமெண்ட் போட்டு அடைத்தேன். மாடியில் செங்கல் மற்றும் சிமெண்ட் போட்டேன். புதிதாக என்ன மாற்றம் செய்தேன் என்றால் ஒவ்வோறு வருடமும் செப்டிக் டேங் சுற்றி சிமெண்ட் போட்டேன். சிமெண்ட் போட்ட இடத்தில் எந்த இடைவெளியும் இல்லாமல் சுத்தமாக இருக்கும் என்றால் சரிதான். நான் ஒவ்வொறு வருடமும் வீட்டிற்கு செலவு செய்த ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

7. நான் எந்த பராமரிப்பும் செய்யாததால் தான் அந்த விவரங்களை நிருபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றாலும் அதன் ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவரது சொந்த கடினமான உழைப்பால் வீடு மற்றும் மனையை கிரையம் பெற்றார் என்றாலும் தற்போது அவர் வழக்கு சொத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. எனது கணவரின் மாமனார் மற்றும் என் கணவர் சேர்ந்து தான் வீட்டுமனையை பெற்றார்கள். நானும் எனது கணவரும் 04.09.2019 அன்று 1ம் பிரதிவாதியை சொத்து எழுதிதரவேண்டும் என்று தாக்கி 1ம் பிரதிவாதி எனது கணவருக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார்கொடுத்தார்என்றால் நாங்கள் தாக்க வில்லை 1ம் பிரதிவாதி தான் எனது கணவருக்கு எதிராக பொய்யான புகார் கொடுத்துள்ளார்.

8. மேற்படி விசாரணையில் நான் எனது மாமியாரை நன்றாக பார்த்துக்கொள்வதாக எழுதிகொடுத்தேன் என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. வழக்கு சொத்து எனது கணவருக்கு தருவதாகவும் கிருஷ்ணாபுரம் வீட்டை 2ம் பிரதிவாதிக்கு தருவதாகவும் புரிதல் ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்தினோமா என்றால் இல்லை வாய்மொழியாக தான் பேசிகொண்டோம். எனது மாமியார் பலகாலமாக உடல்நல குறைவு இருப்பதால் வழக்கு சொத்தை 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் மூலமாக எழுதிகொடுத்தார் என்றாலும் நான் பிரச்சனை செய்வதால் அதை ரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல. ரத்துசெய்யப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது.

9. கிருஷ்ணாபுரம் வீட்டை 2ம் பிரதிவாதிதான் வாங்கினார் என்றால் எனது மாமியார் உதவினார் 2ம் பிரதிவாதியின் மனைவி பெயரில் லோன்போட்டு பெற்றார்கள். தற்போது லோகநாதன் தெரு ஐஸ்வரியம் அப்பார்ட்மெண்டில் உள்ள வீடு என்பெயரில் உள்ளதா என்கணவர் பெயரில் உள்ளதா என்றால்

இருவர் பெயரிலும் இல்லை. வழக்கு சொத்து கீழ்தளம் மட்டும் தான் உள்ளது என்றாலும் அங்கு சுத்தமாக பராமரித்து வருகிறோமா என்றால் சரிதான். 3 வருடத்திற்கு 1 முறை பெயின்டிங் வேலை செய்து வழக்கு சொத்தில் செடிகள் இல்லாமல் சிமென்ட் தரைபோட்டு பராமரித்து வருகிறோம்.

10. இன்றைய தேதியில் என்மாமியார் வீட்டிற்கு வருவார்களா என்றால் சுமார் 5 வருடத்திற்கு முன்பு வந்தார்கள். 2019 ல் புகார் கொடுத்தபிறகு 3 நாள்கள் வந்தார்கள். தற்போது 1ம் பிரதிவாதி வீட்டிற்கு வந்தால் நான் வெளியேற்றுவேனா என்றால் இல்லை.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)